# தலைவாசல் Thalaivaasal

எங்கள் பாரம்பரியம்


வீடு 01 வாசல் 108 | thalaivaasaltv@gmail.com | செவ்வாய்க்கிழமை | ஜனவரி 26, 2021


## யாழ். மாநகருக்குள் புதிதாக வீதி சமிக்ஞைகள் பொருத்த நடவடிக்கை

யாழ்.மாநகருக்குள் மக்கள் நடமாட்டம் அதிகமான மேலும் சில வீதிகளில் சமிக்ஞை விளக்குகள் பொருத்த யாழ். பிரதேச செயலக ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

03

## வடக்கில் 18 பேருக்கு கோரோனா தொற்று
## 15 பேர் மன்னார் ஒருவர் சுதுமலை



வடக்கு மாகாணத்தில் மேலும் 18 பேருக்கு கோரோனா வைரஸ் தொற்று உள்ளமை இன்று செவ்வாய்க்கிழமை கண்டறியப்பட்டுள்ளது.

அவர்களில் 3 பொலிஸார் உள்பட 15 பேர் மன்னார் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் கண்டறியப்பட்டுள்ளனர் என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

“யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வுகூடத்தில் இன்று 319 பேரின் மாதிரிகளும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் 360

03



## பெப்ரவரி 2ம் வாரத்தில்
# வடமாகாண மக்களுக்கு கொரோனா தடுப்பூசி
### மாகாண சுகாதார பணிப்பாளர் அறிவிப்பு

எதிர்வரும் பெப்ரவரி மாதம் இரண்டாம் வாரத்திலிருந்து வடக்கு மாகாணத்தில் கொரோனா தடுப்பூசி பொதுமக்களுக்கு வழங்கலாம் என எதிர்பார்ப்பதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனா தடுப்பூசி வழங்கல் தொடர்பில் ஆராயும் விசேட கலந்துரையாடல் ஒன்று மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தலைமையில் மாவட்ட செயலகத்தில் இன்று இடம்பெற்றது.

03

## கொரோனா உலகளாவிய தொற்று 10 கோடி: மரணங்கள் 21 இலட்சத்து 53ஆயிரம்

உலக அளவில் கொரோனாத் தொற்றின் எண்ணிக்கை 10 கோடியைக் கடந்துள்ளது.

சற்று முன்னர் வெளியாகியுள்ள புள்ளிவிபரங்களின் அடிப்படையில் உலக அளவில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 10 கோடியே 3 இலட்சத்து 86 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

அதேபோல உலக அளவில் கொரோனாத் தொற்றினால்

03

## இலங்கையில் மற்றொரு வகை கோரோனா வைரஸ் கண்டறிவு

கோரோனா வைரஸின் மற்றொரு புதிய வகை இலங்கையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீஜெயவர்தனபுர பல்கலைக் கழகத்தின் வல்லுநர் குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இந்த வீரியம் கூடிய புதிய வைரஸ் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த மாறுபாடு தற்போது டென்மார்க், சுவிட்சர்லாந்து உள்ளிட்ட பல நாடுகளில் வேகமாக பரவி வருவதாக ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## தமிழ், முஸ்லிம் தரப்புக்கள் இணைத்து புதிய அரசியல் கூட்டணி?

அரசியல் ரீதியாக இலங்கையில் பல்வேறு அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டு வரும் தமிழ் - முஸ்லிம் சமூகங்கள் இணைந்து புதிய அரசியல் பாதையொன்றை வகுக்க வேண்டிய தருணம் மலர்ந்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இப்பின்னணியில் இன்றைய தினம் (26) தேசிய ஐக்கிய முன்னணி தலைவர் அசாத் சாலியுடன் சந்திப்பொன்றில் கலந்து கொண்ட அவர், இரு சமூகங்களும் ஒன்றிணைந்து தமக்கிடையிலான கருத்து வேறுபாடுகளை மறந்து பயணிக்க வேண்டியது அவசியம் எனவும்

03



## ஜனாதிபதி செயலணிக்கு தாரைவார்க்கப்பட்ட கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம்

யாழ்.நல்லூர் கந்தர்மடம் சைவப்பிரகாச பாடசாலை ஒரு லட்சம் வேலை வாய்ப்பு வழங்கும் ஜனாதிபதி செயலணியின் பயன்பாட்டுக்காக வழங்கப்பட்டிருக்கின்றது.

மாகாண கல்வியமைச்சின் ஆழுகைக்குட்பட்ட குறித்த பாடசாலை சைவ பாடசாலையாக மிக நீண்டகாலம் இயங்கிவந்த நிலையில்,

மாணவர்கள் எண்ணிக்கை குறைவடைந்த நிலையில் மாகாண கல்வியமைச்சினால் பாடசாலை அண்மையில் மூடப்பட்டிருக்கின்றது.

இதனையடுத்து ஜனாதிபதியின்

03






தரணி எங்கும் தமிழராய் இணைவோம்

# இலங்கைக்கான வெளிநாட்டு முதலீடுகளை அதிகரிப்பதில் உதவுவதாக குடியரசுத்தினத்தில் இந்தியா தெரிவிப்பு



இலங்கைக்கான வெளிநாட்டு முதலீடுகளை அதிகரிப்பது குறித்தும் துறைமுகங்கள் விமான நிலையங்கள் எரிசக்தி - மீள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி போன்ற உட்கட்டமைப்பு திட்டங்களில் ஒத்துழைப்பு வழங்குதல் போன்றவற்றில் இலங்கைக்கு உதவுவதில் உறுதியாக இருப்பதாக இந்தியா தெரிவித்துள்ளது.

இந்தியாவின் 72ஆவது குடியரசுத் தினம் இன்று (செவ்வாய்க்கிழமை) கொண்டாடப்படுகிறது.

இந்த நிலையில் குடியரசுத் தினத்தை முன்னிட்டு இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையும் இந்தியாவும் இணைந்து பணியாற்றி சமகால பொருளாதார மற்றும் ஏனைய சவால்களை வெற்றிகொள்ள முடியும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கொவிட் 19 இன் சவால்கள் இருந்த போதிலும், செப்டம்பர் 26ஆம் திகதி பிரதமர் நரேந்திர மோடி மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கு இடையிலான இருதரப்பு உச்சிமாநாடு மற்றும் பிரதமர் மோடி மற்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு இடையே ஏராளமான தொலைபேசி உரையாடல்கள் இடம்பெற்றன எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அத்தோடு, இந்த ஆண்டு ஜனவரி தொடக்கத்தில், வெளிவிவகார அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டார்.

இதன்போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தனவுடன் இருதரப்பு பேச்சு வார்த்தை மற்றும் இலங்கையின் முக்கிய அரசியல் தலைவர்களுடன் தனி சந்திப்புகளை மேற்கொண்டார்.

இவை அனைத்தும் 2021 ஆம் ஆண்டில் கொவிட் 19 இன் சவால்களிற்கு மத்தியிலும் இருதரப்பினாலும் உயர்மட்ட பேச்சு வார்த்தைகளின் தொடர்ச்சியை பேணியுள்ளோம் என்பதைக் காட்டுகின்றன என தெரிவித்துள்ள அவர், இணையவழி பேச்சு வார்த்தைகள் இரு தரப்பு உறவுகளை மேலும் முன்னெடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரசினால் உருவாகியுள்ள சவால்களை எதிர்கொள்வதற்கு இரு நாடுகளும் பரஸ்பரம் ஆதரவளித்துள்ளன என்றும் கூடிய விரைவில் மருந்துகளை விநியோகிப்பதன் மூலம் இந்த ஈடுபாட்டை எதிர்வரும் வாரங்கள் அல்லது மாதங்களில் ஆழமாக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# கொரோனா உயிரிழப்பு 287ஆக அதிகரிப்பு

இலங்கையில் மேலும் 4 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளதாக அரசத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, பேருவளை பிரதேசத்தை சேர்ந்த 49 வயதுடைய பெண்ணொருவரும் கொழும்பு 08 பிரதேசத்தைச் சேர்ந்த 71 வயதுடைய ஆண் ஒருவரும் தெரணியகல பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயதுடைய பெண் ஒருவரும் வலகாகொட பிரதேசத்தைச் சேர்ந்த 76 வயதுடைய பெண் ஒருவரும் இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இதனையடுத்து, நாட்டில் பதிவான மொத்த கொரோனா மரணங்களின் எண்ணிக்கை 287 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கடந்த 24 மணித்தியாலங்களில் மேலும் 737 பேர் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து இலங்கையில் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 59 ஆயிரத்து 167 ஆக அதிகரித்துள்ளது.

அவர்களில் 50 ஆயிரத்து 337 பேர் பூரண குணமடைந்துள்ள நிலையில், எண்ணாயிரத்து 543 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

# யாழில் இந்திய குடியரசுத் தினம்










72ஆவது இந்திய குடியரசு தினத்தினை முன்னிட்டு யாழிலுள்ள இந்திய துணை தூதரக அலுவலகத்தில் இன்றைய தினம் காலை 9 மணிக்கு நிகழ்வுகள் நடைபெற்றன. முன்னதாக துணை தூதுவர் ச. பாலசந்திரன் இந்திய தேசிய கொடியினை ஏற்றி வைத்தார். அதனை தொடர்ந்து குடியரசு தின நிகழ்வுகள் நடைபெற்றன. நிகழ்வில் தூதரக அதிகாரிகள், அரசியல் பிரதிநிதிகள் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

# இலங்கைக்கு வரும் 5 இலட்சம் இந்திய கொவிட்-19 தடுப்பூசிகள்

இலங்கை 5 இலட்சம் அஸ்ட்ரா ஜெனெகா கொவிட்-19 தடுப்பூசிகளை இந்தியாவிடம் இருந்து பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சரவை அறிவித்துள்ளது.

குறித்த அஸ்ட்ராஜெனெகா கொவிட்-19 தடுப்பூசிகள், எதிர்வரும் வியாழக்கிழமை இலங்கைக்கு கிடைக்குமென பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அமைச்சரவையில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், கொவிட் தடுப்பூசியை ஏனைய நாடுகளுக்கும் வழங்குகின்றமைக்கு இலங்கை அரசு இந்தியாவுக்கு பாராட்டு தெரிவித்துள்ளது.

உலகில் பல நாடுகளில் கொரோனா தடுப்பூசி மருந்து பயன்பாட்டுக்கு வந்துள்ளது. அமெரிக்கா, ரஷ்யா, இங்கிலாந்து, சீனா உள்ளிட்ட நாடுகள் தடுப்பூசி மருந்துகளை உருவாக்கியுள்ளன. அதேபோல இந்தியாவும் தடுப்பூசி மருந்துகளை கண்டுபிடித்து பயன்பாட்டுக்கு கொண்டு வந்துள்ளது.

அந்தவகையில் இந்தியாவில் இருந்தும் பல நாடுகளுக்கு கொரோனா தடுப்பூசி மருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றது. பிரேசில், வங்காள தேசம், பக்ரைன், பூட்டான், மாலைத்தீவு, மொரீசியஸ், மங்கோலியா, மொராக்கோ, மியான்மர், நேபாளம், ஓமன், சிசெல்லஸ், ஆகிய நாடுகளுக்கு இந்தியா தடுப்பூசி மருந்தை ஏற்றுமதி செய்கின்றது.

இந்நிலையில் இலங்கைக்கும் எதிர்வரும் வியாழக்கிழமை, அஸ்ட்ராஜெனெகா கொவிட்-19 தடுப்பூசிகளை வழங்குவதற்கு இந்தியா முன்வந்துள்ளது.

மேலும், இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று வெகுவாக அதிகரித்து வருகின்ற சூழ்நிலையில், இந்த கொவிட்-19 தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றால் கொரோனா அபாய நிலைமையை ஓரளவுக்கு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியுமென அரசாங்கம் எதிர்பார்க்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# தகனம் செய்வது தொடர்பான தற்போதைய நிலையில் எந்த மாற்றமும் இல்லை



கொரோனா தொற்று உறுதியாகி உயிரிழப்பவர்களை தகனம் செய்வது தொடர்பான தற்போதைய நிலையில் எந்த மாற்றமும் இல்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சரவை பேச்சாளர், அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல இதனை தெரிவித்தார்.

கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களை அடக்கம் செய்வதன் வழியாக கொரோனா தொற்று பரவுகிறது என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

அத்தோடு கட்டாயமாக தகனம் செய்வதற்கான அரசாங்கத்தின் கொள்கையையும் ஐக்கிய நாடுகள் சபை கண்டித்துள்ள நிலையில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கே அவர் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக சுகாதார அதிகாரிகள் அளித்த முறையை அரசாங்கம் பின்பற்றுகிறது என்றும் நாட்டில் ஏற்படும் ஆபத்துகளுக்கு அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டியிருக்கும் என்றும் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

அவர்களினால் பரிந்துரைக்கப்பட்ட தற்போதைய முறையிலிருந்து விலகிச் செல்ல முடியாது என்றும் தன்னிச்சையான தங்களினால் முடிவுகளை எடுக்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

# 3 லட்சம் உழவு இயந்திரங்களுடன் டில்லியில் விவசாயிகள் பேரணி

## போராட்டத்தில் ஒருவர் பலி! நள்ளிரவு முதல் 144 தடை உத்தரவு!!











இந்தியாவின் தலைநகர் டில்லியில் மத்திய அரசின் வேளாண் சட்டங்களை எதிர்த்து, குடியரசு தின நாளான இன்று, விவசாயிகள் மாபெரும் உழவு இயந்திர பேரணியை நடத்தினர் இதற்கு நாடு முழுவதும் பல்வேறு விவசாய சங்கங்கள், அரசியல் கட்சிகள் ஆதரவு தெரிவித்தன.

சுமார் 3 லட்சம் உழவு இயந்திரங்களால் நடத்தப்பட்ட இப்பேரணியில் திடீரென வன்முறை வெடித்தது. விவசாயிகள் மீது பொலிஸார் தடியடி நடத்தியதால், ஆத்திரமடைந்த விவசாயிகள், பொலிஸாரின் தடையை தகர்த்து முன்னேறிச் சென்று செங்கோட்டையை முற்றுகையிட்டனர் பொலிஸார் கண்ணீர் புகை குண்டும் வீசினர்.

அத்துடன் செங்கோட்டையில் ஏறி போராட்டம் நடத்தியதுடன் போராட்டம் நடத்திய விவசாயிகள் தங்கள் கொடியையும் அதில் ஏற்றினர். இதனால் செங்கோட்டை பகுதியில் பதட்டமான சூழ்நிலை ஏற்பட்டது. சில இடங்களில் போராட்டக்காரர்களை கலைக்க பொலிஸார் கண்ணீர்புகை குண்டுகளை வீசினர்.

கலவரம் நீடிக்கும் சூழலில், நள்ளிரவு 12 மணிவரை டில்லி முழுவதும் இணைய தள சேவை துண்டிக்கப்பட்டுள்ளது.

டில்லியில் இன்று நள்ளிரவு முதல் பார்லி கூட்டத்தொடர் முடியும் வரை 144 தடை உத்தரவு அமலில் இருக்கும் என அறிவிப்பு வெளியாகியுள்ளது. சட்டம்- ஒழுங்கு பிரச்சினை ஏற்படாமல் தடுக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ட்ரோன் கமரா மூலம் செங்கோட்டையை சுற்றிலும் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. பிரதமர் இல்லம், குடியரசு தலைவர் மாளிகை உள்ளிட்ட இடங்களில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

பேரணியின்போது ஒரு விவசாயி உயிரிழந்துள்ளார். பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தியதால்தான் அவர் உயிரிழந்தார் என விவசாயிகள் குற்றம் சாட்டுகின்றனர். அதேவேளையில் உழவு இயந்திரத்தைக் கொண்டு தடுப்புகளை அகற்ற முயன்றனர். அப்போது உழவு இயந்திரம் கவிழ்ந்துதான் அவர் உயிரிழந்தார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## பெப்ரவரி...

இதன்போது கருத்து தெரிவிக்கும் போதே ஆ.கேதீஸ்வரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாளை ஆறு இலட்சம் கொரோனா தடுப்பூசிகள் இலங்கைக்கு கிடைக்கவுள்ளன முதற் கட்டமாக சுகாதார உத்தியோகத்தர்களுக்கு தடுப்பூசி வழங்கப்படவுள்ளது.

இரண்டாம் கட்டமாக பாதுகாப்புப் பிரிவினருக்கு வழங்கப்படவுள்ளது. அதனைத் தொடர்ந்து எதிர்வரும் பெப்ரவரி மாதம் இரண்டாம் வாரத்திலிருந்து ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட பொதுமக்களுக்கு கொரோனா தடுப்பூசி வழங்கப்படவுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதி...

ஒரு லட்சம் பேருக்கான வேலைவாய்ப்பு வழங்கும் செயலணியின் பயன்பாட்டுக்காக குறித்த பாடசாலை கட்டிடம் வழங்கப்பட்டுள்ளது.

மாகாண கல்வியமைச்சினால் ஒரு வருடத்திற்கு குறித்த பாடசாலை வழங்கப்பட்டிருக்கின்றது. மாணவர்கள் எண்ணிக்கை குறைவதால் பாடசாலையை மூடும் தீர்மானம் எடுக்கப்படுவதற்கு முன்பே கடுமையான எதிர்ப்புக்கள் வெளியாகியிருந்த நிலையில் பாடசாலை மூடப்பட்டு வேறு தேவைக்காக பயன்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது.

## யாழ். மாநகருக்குள்...

யாழ்.பிரதேச செயலக ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தலைமையில் நடைபெற்றிருந்தது. இதன்போது குறித்த விடயம் ஆராயப்பட்டுள்ளது.

இதன்படி யாழ்ப்பாணத்தில் ஸ்ரான்லி வீதி - கே.கே. எஸ் வீதி சந்தி, ஸ்ரான்லி வீதி - மணிக்கூட்டுவீதி சந்தி, கஸ்தூரியார்வீதி - நாவலர்வீதி சந்தி,

இலுப்பையடி சந்தி, கொழும்புதுறை வீதி - பழைய பூங்கா வீதி சந்தி போன்ற இடங்களுக்கான புதிய வீதி சமிஞ்ஞைகள் பொருத்துவதற்கான பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

அதற்கான முடிவுகள் பெப்ரவரி 2ஆம் திகதி யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்படும்.

என இணைத்தலைவர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

## தமிழ், முஸ்லிம்...

அதற்கேற்ப திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் ஜனாஸா அடக்கம் தொடர்பில் குரல்கொடுத்த சுமந்திரன், கஜேந்திரன் சாணக்கியம் உட்பட அனைத்து எம்பிக்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த முன்னாள் ஆளுனர் அசாத் சாலி, முன்னைய காலங்களில் சுமந்திரன், மனோ கணேஷன், விக்ரமபாகு கருணாரட்ன உட்பட தாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து வாராந்த செய்தியாளர்கள் சந்திப்புகளை நடாத்தி வந்ததோடு சமூகங்களுக்கிடையிலான நல்லிணக்கம் மற்றும் ஒற்றுமையை வலியுறுத்தி வந்ததாகவும் இப்போது அதனை மீண்டும் புதுப்பித்து, இரு சமூகங்களுக்கிடையிலான புரிந்துணர்வை வளர்த்து அரசியல் ரீதியிலான ஒற்றுமையுடன் ஒரேயணியாக தேர்தலுக்கு முகங்கொடுக்கத் தயாராக வேண்டியுள்ளதாகவும் தெரிவித்தார்.

இப்பின்னியில் மேலும் பல முக்கியஸ்தர்களுடன் சந்திப்புகள் இடம்பெறவுள்ளதாகவும் அவர் விளக்கமளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வடக்கில்...

பேரின் மதிரிகளும் பிசிஆர் பரிசோதனைக்கு உள்படுத்தப்பட்டன.

அவர்களில் 18 பேருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

மன்னாரில் கோரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் நேரடித் தொடர்புடையவர்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களில் 12 பேருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

மன்னாரில் பணியாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மூவருக்கும் தொற்று உள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஒருவர் வவுனியா தொற்றாளர்களுடன் தொடர்புடைய ஒருவருக்கு தொற்று உள்ளமை இன்று கண்டறியப்பட்டுள்ளது.

மேலும் யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு வருகை தந்தவர்களிடம் எழுதுமட்டுவாழில் வைத்து மாதிரிகள் பெறப்பட்டிருந்தன. அவ்வாறு மாதிரிகள் பெறப்பட்டவர்களில் இருவருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவர்களில் ஒருவர் சுதுமலையைச் சேர்ந்தவர். மற்றவர் கண்டியைச் சேர்ந்தவர்" என்றும் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் கூறினார்.

## கொரோனா...

உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 21 இலட்சத்து 53ஆயிரத்தைக் கடந்துள்ளது. 70 கோடிப் பேர் முழுமையான குணடைந்துள்ளனர்.

உலக அளவில் கொரோனாத் தொற்றினால் அதிகமான பாதிக்கப்பட்டநாடாக அமெரிக்கா காணப்படுகின்றது. அமெரிக்காவில் 2 கோடியே 58 இலட்சம் பேருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது. 4 இலட்சத்து 31 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

இந்தியாவில் ஒரு கோடியே 6 இலட்சம் பேருக்கு தொற்று ஏற்பட்டுள்ளது. 2இலட்சத்து 17 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர்.

பிறேசிலில் 88 இலட்சம் பேருக்கு தொற்றுப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. 2இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர்.

ரஸ்யாவில் 37 இலட்சம் பேருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது. 70 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர்.

ஐக்கிய இராச்சியத்தில் 36 இலட்சம் பேருக்கு தொற்று ஏற்பட்டுள்ளது. 98 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர்.

பிரான்ஸில் 30 இலட்சம் பேருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது. 73 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர்.

ஸ்பெயின் நாட்டில் 26 இலட்சம் பேருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது. 56 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர்..

இத்தாலியில் 24 இலட்சம் பேருக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. 85 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர்.

துருக்கியில் 24 ஆயிரம் பேருக்கு தொற்றுப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. 25 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர்.

ஜேர்மனியில் 24 இலட்சம் பேருக்கு தொற்றுப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. 53 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர்.

கனடாவில் 7இலட்சத்து 53 ஆயிரம் பேருக்கு தொற்று ஏற்பட்டுள்ளது. 19 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர்.

இலங்கையில் 59 ஆயிரத்து 167 பேருக்கு தொற்று ஏற்பட்டுள்ளதுடன் 287 பேர் உயிரிழந்துள்ளனர். 50 ஆயிரத்து 337 பேர் முழுமையான குணமடைந்துள்ளனர்.

# இராணுவமயமாக்கலை நோக்கி நாடு செல்கிறது

## தலதா அத்துகோரல



யாரும் உணராமல் நாடு வேகமாக இராணுவமயமாக்கலை நோக்கி செல்கிறது என எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரல தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இன்று (திங்கட்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய அவர், குறிப்பாக உள்துறை அமைச்சு நேரடியாக பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ளமையை சுட்டிக்காட்டினார்.

அத்தோடு கிராம சேவகர் முதல் மாவட்ட செயலாளர்கள் வரையிலான அதிகாரிகள் பாதுகாப்பு அமைச்சின் கீழ் வருவது இதுவே முதல் முறை என்றும் 25 மாவட்டங்களுக்கும் பாதுகாப்பை மேற்பார்வையிட இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளமையும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் எதிர்காலத்தில் இராணுவ அதிகாரிகள் கிராம சேவகர் பிரிவுகளுக்கும் அமைச்சின் செயலாளர்களாகவும் நியமிக்கப்பட வாய்ப்புக்கள் உள்ளன என்றும் தலதா அத்துகோரல குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை கொரோனா தொற்றினால் 1.1 மில்லியனுக்கும் அதிகமான நோயாளிகளும் 20 ஆயிரம் உயிரிழப்பும் ஏற்பட்டுள்ள உக்ரேனில் இருந்து சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்குள் அனுமதிப்பது குறித்தும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அவர்களுக்கு அனுமதி வழங்குவதற்கு முன்னர் நாட்டு மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் தலதா அத்துகோரல அரசாங்கத்திடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

நிதி பற்றாக்குறையால் சுற்றுலாப் பயணிகளின் வருகைக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளதாக குறிப்பிட்ட அவர், இந்த நடவடிக்கையினால் தங்கள் சொந்த பாரம்பரிய இடங்களை பார்வையிட நாட்டு மக்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் குற்றம் சாட்டினார்.

# தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை 1000 ரூபாயாக அதிகரிக்க அமைச்சரவை அனுமதி

தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை 1000 ரூபாயாக அதிகரிக்க அமைச்சரவை அனுமதியளித்துள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தொழில் உறவுகள் அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

2020ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவு திட்டத்தினூடாக பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான நாளாந்த அடிப்படை சம்பளம் 1,000 ரூபாய் பெற்றுக் கொடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பை செயற்படுத்தும் வகையில் தோட்டத் தொழிலாளர் சம்பள கூட்டு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ள தரப்பினருடன் பல சுற்று பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்ட போதும் அது வெற்றியளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# வீதி விபத்துக்களில் சிக்கி ஆறு நாட்களில் 30 பேர் உயிரிழப்பு

நாடு முழுவதும் ஜனவரி 17ஆம் திகதி முதல் 22ஆம் திகதி வரையான ஆறு நாட்களில் பதிவான 427 வீதி விபத்துக்களில் 30 பேர் உயிரிழந்துள்ளதுடன், 90 பேர் படுகாயமடைந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் இதன்போது 189 பேர் சிறு காயங்களுக்கும் உள்ளாகியுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ் அதிபருமான அஜித் ரோஹன குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இந்த விபத்துக்களின்போது 119 வாகனங்கள் சேதங்களுக்கு உள்ளாகியுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு விபத்துக்களில் சிக்கி உயிரிழந்தவர்களில் பெரும்பாலானவர்கள் மோட்டார் சைக்கிள் விபத்துக்களிலேயே சிக்குண்டவர்கள் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

இதேவளை கடந்த 24 மணிநேரத்தில் பதிவான வீதி விபத்துக்களில் மாத்திரம் ஐவர் உயிரிழந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தகக்கது.

# 54 வீதமானவர்களே கொரோனா தடுப்பு மருந்தை பயன்படுத்த தயார்

இலங்கையில் கொரோனா வைரஸுக்கு எதிரான தடுப்பு மருந்தினைப் பயன்படுத்துவதற்கு 54 வீதமானவர்களே தயாராக இருப்பதாக ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

சுகாதார ஊக்குவிப்பு பணியகத்தின் ஆராய்ச்சி பிரிவு மேற்கொண்ட கருத்துக் கணிப்பின்போதே இந்த விடயம் தொடர்பாக தெரியவந்துள்ளது.

அதன்படி, 38 வீதமானவர்கள் தாங்கள் உறுதியாக எதனையும் தெரிவிக்க முடியாத நிலையில் உள்ளதாக தெரிவித்துள்ளனர் என்பதோடு, 8 வீதமானவர்கள் தாங்கள் மருந்தினை பயன்படுத்தப் போவதில்லை என தெரிவித்துள்ளனர்.

மருந்தினை பயன்படுத்துவது குறித்து 34 வீதமான ஆண்களும் 40 வீதமான பெண்களும் நிச்சயமற்ற நிலையில் உள்ளதும் கருத்துக்கணிப்பின் மூலம் தெரியவந்துள்ளது.

பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்த 55 வீதமானவர்கள் தாங்கள் கொரோனா வைரஸ் தடுப்பு மருந்தினை பயன்படுத்துவதற்கு தயாராகவுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, 50 வீதமான தமிழர்களும் 59 வீதமான முஸ்லிம்களும் தாங்கள் தடுப்பு மருந்தினைப் பயன்படுத்த தயாராக உள்ளதாக தெரிவித்துள்ளமையும் அந்த ஆய்வில் தெரியவந்துள்ளது.

சுகாதார பணியாளர்களில் 57 வீதமானவர்கள் தாங்கள் கொரோனா வைரஸ் தடுப்பு மருந்தினை பயன்படுத்த தயார் என தெரிவித்துள்ளஅதேநேரம், 37 வீதமானவர்கள் தாங்கள் நிச்சயமற்ற நிலையில் உள்ளதாக குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, பெரும்பாலான மக்கள் மருந்தின் வகை பக்கவிளைவுகள் குறித்து கவலை வெளியிட்டுள்ளனர் என்பதும் இந்த ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளவுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியத்திடம் இலங்கை தெரிவிப்பு

பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளவுள்ளதாக இலங்கை ஐரோப்பிய ஒன்றியத்திடம் தெரிவித்துள்ளது.

இலங்கையும் ஐரோப்பிய ஒன்றியமும் தங்கள் கூட்டு ஆணைக்குழுவின் இருபத்தி மூன்றாவது சந்திப்பை நேற்று காணொளி காட்சி வாயிலாக நடத்தின.

இந்த சந்திப்பின்போதே இலங்கை பயங்கரவாத தடைச்சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளவேண்டும் என்றும் அதனை சர்வதேச தராதரங்களிற்கு ஏற்ற வகையில் மாற்றவேண்டும் என ஐரோப்பிய ஒன்றியம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

இதற்கு பதிலளித்துள்ள இலங்கை பயங்கரவாத தடைச்சட்டத்தில் உரிய மாற்றங்களை மேற்கொள்வதற்காக பயங்கரவாத தடைச்சட்டம் குறித்த ஏற்பாடுகளை மீளாய்விற்கு உட்படுத்தவுள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

மேலும் இதன்போது, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இலங்கை மக்களுக்கிடையிலான உறவை மேலும் வலுப்படுத்த விருப்பம் தெரிவிக்கப்பட்டது.

அத்தோடு, சுகாதாரம் மற்றும் சுற்றுலாத் துறைகளை இலக்காகக் கொண்ட கொவிட் 19 தொற்றுநோயைக் கையாள்வதற்காக இலங்கை அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு ஆதரவளிக்க ஐரோப்பிய ஒன்றியம் 22 மில்லியன் டொலர் மானியம் வழங்கியதற்கு இலங்கை இதன்போது நன்றி தெரிவித்தது.

# 30 அடி பள்ளத்துள் பாய்ந்த் ஓட்டோ: சாரதி உட்பட மூவர் காயம்

நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அட்டன் - பொகவந்தலாவ பிரதான வீதியில் டிக்கோயா கிளங்கன் பகுதியில் முச்சக்கரவண்டி ஒன்று இன்று அதிகாலை 50 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியதில், அதில் பயணஞ் செய்த 3 பேர் படுங்காயங்களுக்குள்ளாகி டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அட்டன் - டிக்கோயா பகுதியிலிருந்து நோர்வூட் பகுதிக்கு சென்றுகொண்டிருந்த போதே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில் முச்சக்கரவண்டியில் பயணித்த இருவரும், சாரதியுமே காயமடைந்துள்ளனர்.

சாரதியின் கவனயீனம் காரணமாகவே இவ்விபத்து நிகழ்ந்துள்ளதாகவும், இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை நோர்வூட் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மஹர சிறைச்சாலை அமைதியின்மை: குற்றத்தை ஒப்புக்கொண்ட 50 கைதிகளுக்கு 2 மாத சிறை

மஹர சிறைச்சாலையில் ஏற்பட்ட அமைதியின்மை தொடர்பாக குற்றத்தை ஒப்புக்கொண்ட 50 கைதிகளுக்கு இரண்டு மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 29 மற்றும் 30 ஆம் திகதிகளில் மஹர சிறைச்சாலையில் இடம்பெற்ற அமைதியின்மையின் போது 11 கைதிகள் உயிரிழந்தனர்.

இந்நிலையில் இந்த சம்பவத்தில் சொத்துக்களை சேதப்படுத்தியமை கலகம் செய்தல் மற்றும் சிறையில் இருந்து தப்பிக்க முயன்ற குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இருப்பினும் குறித்த குற்றச்சாட்டுகளை மறுத்த 12 கைதிகள் பெப்ரவரி 08 ஆம் திகதிவரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# மரத்தின் கிளையொன்று குத்தியதால் ஒருவர் பலி



மட்டக்களப்பு மாவட்டம் வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தும்பங்கேணி பிரதான வீதியில் மரமொன்றுடன் வாகனம் மோதி விபத்துக்குள்ளான நிலையில் மரத்தின் கிளையொன்று குத்தியதால் சாரதி உயிரிழந்துள்ளார்.

இன்று காலை இடம்பெற்ற இந்த விபத்தில் பெரியகல்லாறு வைத்தியசாலை வீதியை சேர்ந்த கே.சிறிக்காந்த் என்பவரே உயிரிழந்துள்ளதாக வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்தனர்.